**உஹன பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும், விரிவான முகாமைத்துவ அறிக்கையும் 2020 யூலை 22 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உஹன பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 98,000 பெறுமதியான கூரை உபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் கணக்கு தயாரிக்கும் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நன்கொடையாக கிடைத்த ரூபா 99,999 பெறுமதியான தொலைக்காட்சி இயந்திரம் மூலதனமாக்கப்படவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது மூலதன சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மாகாண சபையிலிருந்து கிடைக்க வேண்டிய அலுவலக சம்பளம் மற்றும் உறுப்பினர் படிகள் ரூபா 2,260,229 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக கண்டறிந்து எதிர்வரும் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். |
| (iv) | உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திஸ்ஸபுற கிழக்கு வீதி அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 68,490 தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கிடைக்க வேண்டிய நிதி ஏற்பாடாக கணக்கீடு செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | ரூபா 200,000 பெறுமதியான 03 வாகனங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2017 இன் மதிப்பீட்டின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட ரூபா 200,000 பெறுதியான வாகனங்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | வாகனங்கள் மற்றும் 09 இயந்திர உபகரணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு மூலதனமாக்கப்பட வேண்டும். | மீண்டும் மதிப்பீடொன்று மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (vii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 50,000 தொகையான நூலக புத்தகங்கள் ரூபா 500,000 ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (viii) | 2018 ஆம் ஆண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய ரூபா 898,200 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக கிடைக்க வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | **பெறவேண்டிய கணக்குகள்** | | |
| | வாடகைக்கு வழங்கப்பட்ட 12 கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய ரூபா 137,222 தொகையான நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட இந்த நிலுவையில் ரூபா 37,674 தொகை இது வரையில் அறவிடப்பட்டுள்ளது. |
| (ii) | **செலுத்தவேண்டிய கணக்குகள்** | | |
| | முன்னைய ஆண்டுகளுக்குரிய தீர்த்து வைக்கப்படாத நானாவித வைப்புக்கள் ரூபா 2,648,755 ஆகும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வைப்புக் கணக்கில் கொண்டு வரப்படுகின்ற இந்த பெறுமதி முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற பெறுமதியாகும். இது தொடர்பாக |

| | | |
|---|---|---|
| | | கண்டறிந்து எதிர்வரும் கணக்குகள் தயாரிக்கும் போது தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 16,003,333 தொகையான 06 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 2,883,155 தொகையான 03 பொறுப்பு விடயங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பதிவேடுகளை தயாரித்து நாளதுவரையாக்கி கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம் | 44,204 | 06 ஊழியர்களுக்காக 2019 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு குறைவாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டம் | 14,818 | 06 ஊழியர்களுக்காக 2019 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு குறைவாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவு | - | கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான உப விதிகளை விதித்து உரிய செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை விதித்து செலவினங்களை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான உப விதிகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 217 | - | பிரதேச சபையினால் உரிமை கோரப்படுகின்ற காணிகளை கையேற்று மதிப்பீடு செய்து நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | பிரதேச சபைகள் விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது காணியை கையேற்பதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | அரச நிர்வாக சுற்றறிக்கை<br>----------------<br>2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை. | - | உத்தியோகத்தரின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளை பதிவதற்கு மீளாய்வாண்டின் போது கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது கைவிரல் அடையாள இயந்திரம் நிறுவனத்தில் பொருத்தப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2015 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 30/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | - | சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத வாகனங்களை இனங்கண்டு விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருள் மெய்மெய்யாய்வு சபை மூலம் விற்பனைக்காக முன் மொழியப்பட்ட வாகனங்கள் பொது 47 படிவத்தின் மூலம் பிரதி பிரதம செயலாளர் (நிதி) இற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2019 இன் பொருள் மெய்மெய்யாய்வு சபை தீர்மானத்தின் பிரகாரம் மீண்டும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (எ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதி 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | வாடகைக்கு வழங்கப்பட்ட 24 உஹன கடைகளின் வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்ட போதும் இது வரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,004,957 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,335,440 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 2,294,785 | 1,549,294 | 1,829,867 | 3,596,171 | 1,944,785 | 1,641,072 | 1,185,513 | 3,876,744 |
| (ii) | வாடகை | 8,624,568 | 5,642,732 | 5,727,443 | 137,222 | 5,830,736 | 5,283,934 | 5,376,956 | 221,933 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 951,000 | 573,950 | 573,950 | 0 | 830,000 | 744,165 | 744,165 | 0 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,802,000 | 5,520,212 | 5,678,324 | 2,168,039 | 4,340,000 | 4,457,749 | 5,311,435 | 2,326,151 |
| | | 17,672,353 | 13,286,188 | 13,809,584 | 5,901,432 | 12,945,521 | 12, 126, 920 | 12,618,069 | 6,424,828 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

**ஆதன வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆதன வரி பதிவேட்டின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதன வரி ரூபா 2,961,668 தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | கடந்த ஆண்டினதும் மீளாய்வாண்டிற்குரியதாகவும் ரூபா 1,398,286 தொகை இது வரையில் அறவிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகார தரப்பினரிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 525,550 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,642,489 ஆகும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான 30 பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | உப விதிகளை தயாரித்து தேவையான அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், இது வரையிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுப்பசளை தளத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,314,000 தொகையொன்று முற்பணமாக ஒப்பந்தகாரருக்கு 2016 பெப்ரவரி 18 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. காணியின் உரித்தை தீர்த்து வைக்காமையினால் இந்த செயற்திட்டம் தொடர்ச்சியாக தாமதமடைந்து காணப்பட்டது. மீள பணத்தை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது ஒப்பந்தகாரர் செலவிட்டுள்ள தொகையைக் கழித்து எஞ்சியுள்ள தொகையை 2019 பெப்ரவரி 25 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கு ஒப்பந்தகாரர் இணங்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணம் மீளக் கிடைத்திருக்கவில்லை. | ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிட வேண்டிய பணத்தை பெற்று, பொருத்தமான இடம் ஒன்றை தெரிவு செய்து செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். | மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டின் பேது உஹன பிரதேச செயலாளரினால் வரைபட இலக்கம் 350/16 என்ற காணிப் பகுதி சட்ட ரீதியாக உஹன பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டதுடன் அதற்கு சுற்றாடல் பரிந்துரை மற்றும் ஏனைய தரப்பினரின் பரிந்துரை பெறப்பட்டிருந்தது. இந்தக் காணி தொடர்பாக அடுத்துள்ள காணி உரிமையாளர் எதிர்ப்பினால் முன்னாள் கனிய எண்ணெய் வள அபிவிருத்தி பிரதி அமைச்சரினால் அந்த காணிக்கு அருகில் வீடமைப்பு செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக காணியொன்று இனங்காணப்பட்டமையால் உரிய காணியில் கழிப் பொருட்களை அகற்றுதல் மற்றும் கூட்டுப்பசளைத் தளத்தை நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறுத்த வேண்டிய ஏற்பட்டிருந்தது. அவ்வாறே இதற்காக பிரதி அமைச்சரினால் முன் மொழியப்பட்ட மாற்று காணி அம்பாறை மாவட்டத்திற்கு வெளியே மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்தமையினால் அந்த காணியும் இந்த செயற்திட்டத்திற்காக பொருத்தமானதாக இருக்கவில்லை. இதனால் கழிவுப் பொருளை அகற்றும் |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கைகள் அம்பாறை நகர சபைக்கு கொண்டு செல்லவேண்டிய ஏற்பட்டது. தற்போது கழிப் பொருள் மீள் சுழற்சி நிலையத்தை ஸ்தாபிப்பதற்காக புதிய காணியொன்றை பெற்றுக் கொள்ளல் தொடர்பில் உஹன பிரதேச செயலாளருக்கு மீண்டும் அனுப்பப்பட்டுள்ளது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியில் 08 பதவிகளுக்காக 15 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களும் ஒரு பதவியில் மிகையும் காணப்பட்டன. | தேவையான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளுக்காக வெற்றிடங்களை நிரப்புவதற்கு உயர் நிறுவன முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் 12 ஊழியர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 80,854 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | நிரந்தர அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்ட சுகாதார தொழிலாளர் மற்றும் வீதித் தொழிலாளர் வேறு கடமைகளுக்ககாக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 2018 திசெம்பர் மாதம் மீண்டும் நாட் கூலி அடிப்படையில் சுகாதார தொழிலாளி ஒருவர் சேர்க்கப்பட்டு அலுவலகத்தில் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | ஆட்சேர்க்கப்படுகின்ற தொழிலாளர்கள் பதவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | நூலகர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்ட 03 நூலகங்களின் கடமைகளை மேவுகை செய்து நூலக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் போது காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வாக அங்கீகரித்த பதவியணியில் நூலக தொழிலாளர் பதவி காணப்படாமையினால் வீதித் தொழிலாளர் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே அலுவலகத்தில் அலுவல உதவியாளர் பதவியின் கடமைகளைச் செய்தவர்கள் வேறு கடமைகளுக்காக நியமிப்பதற்கு ஏற்பட்டமையினால் அலுவலக உதவியாளர் பதவியின் கடமைகளுக்காக சுகாதார தொழிலாளரை ஈடுபடுத்த வேண்டிய ஏற்பட்டிருந்தது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ஆதன வரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போதும் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | புதிய ஆதன வரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்து 2001 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என 09 விடயங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எங்கள் நிறுவனத்திற்கு அரச சார்பற்ற அமைப்பின் மூலம் (UN, UNOPS) வழங்கப்பட்ட வாகனங்களை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குகு ஏஓ 06 விண்ணப்பப்படிவத்தில் கையளிப்பவரின் கையொப்பத்தினை பெற்றுக் கொள்வதற்காக அந்த நிறுவனங்களின் அலுவலகங்கள் இந்த நாட்டில் இல்லை. வடக்கு கிழக்கு புனரமைப்பு அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட போதிலும், அந்த அமைச்சு தற்போது மாகாண சபையில் காணப்படாதிருந்தமையால் அந்த வாகனங்களை கையேற்பதற்கு முடியாதிருந்தது. எனினும், மோட்டார் கிரேடர், 01 தொன் உருளை, 12 தொன் உருளை மற்றும் 08 தொன் உருளை எங்களுக்கு வழங்கப்பட்ட போது பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த வாகனங்கள் வீதியில் ஓடப்படாதிருந்ததுடன் ஏனைய வாகனங்கள் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படுகின்றமையால் பதிவு செய்வதற்கு தேவையற்றிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. PE-8373 ஆம் இலக்க கெப் வண்டியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.5.2 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 08 வாகனங்கள் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | வாகனங்களின் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமான அனுமதிப் பத்திரத்தை பெறக் கூடியதாக இருந்த வாகனங்களுக்காக வாகன அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.6 பெறுகைகள்

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |